Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953.

விரோதிஜு (1839) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ ஆவணிமீ அஉ வெள்ளிக்கிழமை (24 August. 1962) [இல-உ௦]

உலகியல் அலை

# மர்மமயமான நிலையில் மந்திரிசபை!

—————:0:—————

## அரிசி வெட்டு ஆகாது

### என்பது அமைச்சர்பலரின் எண்ணம்!!

## அப்படியானல் பீலிக்சினது செப்படி வித்தை எப்படியாகும்!

வாடை, சோழகம், கச்சான், கொண்டல் எல்லாம் சேர்ந்து வீசும் கலப்புக்காற்று நிலைமையிற் பாராளுமன்றமும் முக்கியமாக மந்திரிசபையும் குறிப்பாக ஆளுங் கட்சியும் இடர்ப்படுகின்றன. பெண்ணென்றுற் பேயும் இரங்கும் என்பார்களே அதுபோல அரிசி என்றுல் ஆரும் இரங்குவது நூதனமன்று.

காலிமுக முன்றிலிற் பீலிக்சின் சபதம்: அதை 'கேலி' செய்யும் வகையில் நேற்றிரவு மந்திரி சபையில் மனமாற்றம். என்ன விளையும்? எப்படி விளையும் என்று இன்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## கோயிற்சொத்தில் கைவைக்காதீர்!

சைவக்கோயில்களின்பேரில் கிடக்கும் சொத்துக்களிலிருந்தும் பெறும் வருமானம் கோயில் பூசைகளுக்கே போதாமல் இருப்பதால் ஊரவர்களிடமும் உதவிபெறும் நிலைமையே இருந்து வருகிறதென்றும், ஆகையால் அந்தச் சொத்துக்கள்மீது வரி விதிக்கக்கூடாது என்னும் கோரிக்கையும் யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளின் விடுதிச் சாலைகளில் தாவர போசனம் வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அரசாங்கம் செய்துதர வேண்டும் என்றும் கோரும கடிதங்கள் யாழ்-சைவபரிபாலன சபையாரால் அரசாங்கத்திற்கு அனுப்பப் பெற்றுள்ளன.

—

### இணுவில் கந்தசுவாமிகோயில்

### இலக்ஷ அர்ச்சனுநந்தர மகா சங்காபிஷேகம்

25-8-62 சனிக்கிழமையன்று மகோற்சவத்தை அடுத்து நாற்பத்தெட்டு நாள் நடைபெற்று வந்துள்ள இலக்ஷார்ச்சனைப் பூர்த்திவிழா நண்பகல் காவடி, மகேசுர பூசை மகாசங்காபிஷேக வைபவத்துடனும், மாலைகூட்டுப்பிரார்த்தனை கதாகாலக்ஷேப நிகழ்ச்சிகளுடனும் இரவு ஆறுமுகப்பெருமான் வீதிவலம்வரும் காட்சிகளுடனும் நடைபெற்று நிறைவுற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இசைமணி M வர்ணகுலசிங்கம் அவர்களது திருமுறை இசைக்கச்சேரியும் குப்பிளான் இசைவல்லார் செல்வத்துரையின் பக்திப் பாடல்களும் இடம்பெறும்.

—

### யாழ்ப்பாணத்தில் மலாயாத் தமிழர்

மலாயாவில் தமிழ் வளர்ச்சிக்கும் சைவநெறி விருத்திக்குமாக உழைத்துவரும் கா. இராமநாதன் அவர்கள் இன்று 12-15 மணிக்கு பலாலி வானூர்தி நிலையத்தில் வந்திறங்குவார். அவர் 30-8-62 வரை பருத்தித்துறையில் தங்கி சிவானந்த கலா நிலையத்தில் இருநாட்கள் அந்தர்யோகமும், யாழ்ப்பாணத்தில் சிலவிடங்களில் குறிப்பாக, தீர்த்தத்தினத்தன்று இரவு 9 மணிகு நல்லூர்ச் சந்நிதியின் முன்னேயுள்ள பந்தலில் மணி பாகவதரவர்கள் சமுகத்தில் நடைபெறும் இராமாயணப்பூர்த்தி விழாவிலும் சொற்பொழிவுகளும் நடாத்துவார்.

## நற் சிந்தனை

ஐங்கரத் தொருகோட்
டானையைத் தந்தவன்
அங்கு மிங்கு
மெங்குமாய் நிற்கும்.

### முண்டகம் மலர்ந்ததன்ன மூவிருமுகம்

"பரமேசுர புத்திரனுன ஷண்முகக்கடவுளே! ஆறுதாமரைப் புஷ்பங்களை உன் ஆறுமுகங்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம். அந்த முகங்களில் தோன்றும் புன்சிரிப்புகள் தாமரை மலரில் உள்ள அன்னப் பட்சிகள் போன்றுள்ளன. அசைந்துகொண்டிருக்கும் கடைக்கண் பார்வைகளோ மலர்களில் தேனைக் கிரகிக்க வந்த அறுகால் வண்டுகளைப் போன்றுள்ளன. உனது அதரமோ அமிர்தத்தைப் பிரவாகிக்கின்றது. ஆகையால் உனது வதனங்களுக்கு பூரண உவமை தாமரை மலர்களேயாகும். இவ்வாறு உனது முகக்கமலங்களைத் தியானம் செய்பவர்களின் பிறவி நின்கருணையால் பெரும் பயனை அடையும்.

— ஆதி சங்கரர்

பாரரழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாகிறத்தசேவடிகடோன்றும்
ஓராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபோற்புப்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

நேயர்கள் நெஞ்சம்

## சகலர் பண்பாடு

# சிவஞானபோதம்

சகலர் ஆவார் உடம்பெடுத்துப் பிறந்த சகலரும் ஆவர்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்' என்று தொடங்கி மனிதர் தேவர் இறுதியாகப் பேசப்படுந் தாவர சங்கமங்களாகிய உயிர்வர்க்கம் அனைத்தும் சகல வர்க்கமேயாம்.

சகலரைத் 'திரிமலத்தார்' என்கின்றது திருவருட்பயன். திரிமலம் மும்மலம். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன.

ஒரு மலத்தார் இருமலத்தார் முறையே விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆவர்.

"இந்நூல்மும்மைமலர்க்கு" என்று கூறி முற்றுகின்றது சிவஞானபோதம். மும்மை மலர் சகலர்.

"எந்தை சனற்குமரன் ஏத்தித்
தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளை
ஞான நூல் — சிந்தை செய்து
தானுரைத்தான் மெய்கண்டான்
தாரணியோர் தாமுணர
ஏதுதிருட்டாந்தத்தால் இன்று"

என்பது சிவஞானபோதச் சிறப்புப்பாயிரம்.

சிவஞானபோதம் திருக்கைலாசச்சொத்து. தாரணியோர் பொதுச்சொத்து. சகலரின் சொத்து.

இந்தப் பூமியில் சகலரில் உயர்ந்தோர் மனிதர்; இவர் முத்திறத்தினர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## வெல்லும் திறன் படைத்த மெய்ப்பொருள் நாயனர்

•••○○•••

[பன்னலை மயிலப்பை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற பெரியபுராண உபந்நியாசத் தொடரில் ஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

மக்களில் ஒரு வகையினர் அறவழியில் நின்று பெரும் புகழ் படைத்தனர். தாங்கள் கைக்கொண்ட அறக் கொள்கையில்நின்றும் தம் உயிர்க்கு இறுதிவரும் காலத்தும் தவற மாட்டார்கள். உதாரணமாக அரிச்சந்திரன் தமக்கு எவ்வளவோ துன்பங்கள் வந்தவிடத்தும், தன் மனைவியையே தன் கையால் கொல்ல வேண்டிய தருணம் வந்தபோதும் பொய் பேசுவதில்லை என்னும் அற நெறியைக் கடைப்பிடித்தான். சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறுவின் உயிரைப் பாதுகாப்பதற்காக தனது உடலையே அரிந்து உதவினுன். மற்றோர்வகையினர் உலகத்திலே தாம் விரும்பியதைப் பெறுவதற்காக எந்த வழியையும் பின்பற்றுவார்கள். அந்த வழி அறத்தின்பாற்பட்டதோ அல்லவோ என்று ஆராயமாட்டார்கள். இந்த இருவகையாரில் முதல் வகைக்கு உதாரணமாகச் சொல்லத் தகுந்தவர் மெய்ப்பொருள்நாயனுர். அவர் ஓர் அரசராக இருந்தும்

"மாலற நேயம் மலிந்தவர்
வேடமும்
ஆலயந்தானும் அரனெனத்
தொழுமே"

என்னும் சைவ சித்தாந்தக் கொள்கையில் திறம்பாது நின்றுர் அறநெறியில் நின்றும் உலகம் காத்தனர் பண்டைய அரசர்கள். தன் குலத்துக்கு ஒரு மகன் என்பதைப் பற்றியும் சிந்தியாமல் "தருமம் தன் வழிச்செல்கை கடனென்று" தேரால் தன்மகனை நெரித்தான் மனுச் சக்கரவர்த்தி. "அரசியல் நெறியில் வந்த அறநெறி வழாமற் காத்து" என்னும் சேக்கிழார் வாக்கினுலே மெய்ப்பொருள் நாயனுர் நீதி வழுவாது அரசாட்சி செய்தார் என்பது அறியலாம்.

முத்திநாதன் என்பவன் வேறோர் சிற்றரசன். மேலே கூறியவகைகளில் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். பலமுறை மெய்ப்பொருளையுரோடு யுத்தம் செய்து தோல்வியடைந்தான் எனவே வெற்றியடைய வஞ்சக வழியைக் கைக்கொள்ளத் தீர்மானித்தான். மெய்ப்பொருளின் அடியார் வணக்கத்தின் தன்மையை அவன் நன்கு அறிந்தவன். தனது தேகமெங்கும் திருநீற்றைப் பூசினுன் சடையை முடிந்தான். புத்தகம் வைத்திருக்கும் உறையொன்றைக் கையிலேயெடுத்து அதனுள்ளே ஒரு வெட்டும் படையை மறைத்துக்கொண்டான். இந்நிலையைசேக்கிழார்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நல்வரம்வேண்டு நெஞ்சமே!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : தோடி — தாளம் : ஆதி

பல்லவி

நல்லூரில் அமர்ந்திருக்கும் ஞானபண் டிதனிடம்
நல்வரம் வேண்டு நெஞ்சமே — வினைதீர்க்க (நல்)

அநுபல்லவி

பொல்லாத சூரர்குலம் பொடிபடவே முடித்து
புவனமெல் லாம்காக்க பொலிந்தவே லைப்பிடித்து

சரணம்

பஞ்சப்புலன்கள் செல்லும் பாதைகளைச் சுருக்க
பரவை எனப்பெருகும் பவத்தொடர்த் தொகை
கருக்க
[illegible] தண்டனையால் நெருக்க
[illegible] தானந்தத் தோடிருக்க
(நல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

—0—

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர் தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய் புதன் (28, 29-8-62) ஆகிய இரு நாட்களும் இந்துசாதனம் அலுவலகமும், சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையும் மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

- அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஞூ ஆவணி மீ
அ உ வெள்ளிக்கிழமை

## கோயில் நிகழ்ச்சிகளிற் கொள்ளவேண்டிய ஒழுங்குகள்

—o—

'நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு' இறைவனை நெஞ்சார இறைஞ்சுதல் சைவச் சால்பு. ஆலயந் தொழும் சீலம் தமிழகப் பண்பு. எனவே திருக்கோயில்கள் வேதாகம முறைப்படி விளங்கவேண்டும். ஆங்கு நடைபெற வேண்டிய நித்திய விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு முறைக்குள்ளானவையாகத் திகழ்தல் கடமையாகும்.

புனிதம் ஒழுங்கையும் ஒழுங்கு புனிதத்தையும் கொணர்விப்பன. பொழுது புலர்ந்ததும் அகமும் புறமும் புனிதமாக ஒழுக வேண்டிய ஒழுங்கைப் பழக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் அனைவரும் பச்சிளம் பராயத்திற் பள்ளிக்கூடங்களிலேயே அறிந்திருக்கின்றோம். தாய் தந்தையர் காட்டும் முன்மாதிரியிற் கண்டிருக்கின்றோம். இவ்வாறே ஆலய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஒழுங்குகள் இருக்கின்றன. இவற்றை நடைமுறையிற் கொண்டு வருவது கோயிற் பணி செய்யும் கடமைபூண்டிருக்கின்றவர்களுக்கும் வழிபடுகின்ற அன்பர்களுக்குமுரிய கடன். எக்கருமத்துக்கும் உரிய காலம் விதியாக இடப்பட்டிருக்கின்றதை உலக அமைப்பிலேயே காண்கின்றோம். நீதிமன்றத்தில் நேரம் தழுவிய நிகழ்ச்சிகள் நியமமாக நடைபெறுவதை உற்று நோக்கினல் அந்த ஒழுங்கு தவறுதியற்றப்பட வேண்டுமென்றும் அதில் இழுக்குண்டாயின் அதற்குக் காரணமாயுள்ளவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் அறிவோம். தெய்வ நீதிமன்றங்களில் இந்த ஒழுங்குமுறை எத்துணைச் செம்மையாக இருக்க வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

தமிழகக் கோயில்களிலே நிகழ்ச்சி ஒழுக்க நெறி நல்லை ஆறுமுகப்பெருமான் ஆலயத்திலே தலை சிறந்து காணப்பெறுவது இந் நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றது. இவ்வாறு எல்லாக் கோயில்களிலும் ஒழுங்கு நெறியைக் கண்ணுங்கருத்துமாகப் பேணிக் காப்பாற்றினல் தெய்வ மணஞ் சிறந்து தேசமெங்கும் பொலியும்.

இறைவன் சந்நிதி "இன்னிசை வீணைய ரியாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திர மியம்புநர் ஒருபால் துன்னியபிணைமலர்க் கையினர் ஒருபால் தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால். சென்னியிலஞ்சலி கூப்பினர் ஒருபால்" என்ற காட்சியாகப் பொலிதலே சமயகுரவர்கள் மக்களுக்குப் புகட்டிய முறை. காண வினியதாய் கவினைத் தருவதாயுள்ள திருநீற்றைப் பேணி அணிந்து நெற்றியிலே சந்தனத் திலகமிட்டு உருத்திராக்க மாலை உடம்பிற் றிகழ நாவினுக் கருங்கலமாகிய நமச்சிவாய மந்திரத்தை நவின்று ஈசனை இறைஞ்சும் அன்பர்களின் சபையாக ஆலயம் அமையவேண்டியதே ஆன்றோர் காட்டிய நெறி. நெய் விளக்குநிரை நிறைவாய் நின்றொளி செய்ய நன்மலர் மாலைகள் மகரதோரணங்கள் வன்னமாய்த் தொங்கத் தேவ சபையாக ஆலயங்கள் திகழ்தலே செம்மை.

அப்பர் சுவாமிகளின் உழவாரத் தொண்டின் பெருமையைப்பற்றி உரை நிகழ்த்துகின்றோமேயன்றி அப்பணியை நடைமுறையில் ஆலயங்களில் அமைப்பதற்கு உழைக்கின்றிலேம். அவப்பொழுதைத் தவப்பொழுதாக்குவதற்கு ஆலயஞ் செல்கின்றோம். அங்கு தவத்திற்குரிய சால்பு மிளிர்தல் அவசியமன்றோ! தொண்டர்படைகளிலே சாரண இயக்கத் தோற்றத்துடன் சிறுவர்கள் தோன்றிப் போக்குவரத்து ஒழுங்குகளைச்செய்துவிட்டாற் போதுமா? ஆலயங்களிலே திருக்கோலச் செம்மை சிறந்து பொலியச் சைவ சாதனங்கள் விளங்க வேண்டும்.

—0—

## கிளிநொச்சியில் காந்தீயசேவாசங்க விழா

—0—

அகில இலங்கைக் காந்திய சேவாசங்கத்தின் 13-ஆவது ஆண்டு நிறைவுவிழா சென்ற 19 8-62 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் உருத்திரபுரத்தைச் சேர்ந்த காந்தி நிலையத்தில் முற்பகல் பத்துமணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

மாலையில் அங்கு நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்திற்கு ஏராளமான தமிழ் மக்கள் வருகை நல்கி இருந்தனர். இவ்விழாவில் திரு. எஸ். எச். பேரின்பநாயகம், கொழும்பு ஆனந்தக்கல்லூரி அதிபர் திரு. கருணனந்த, முதலியார் திரு. செ. சின்னத்தம்பி, திரு. பொ. கந்தையா, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் முதலிய பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். ——

உ



# நல்லூர்க் கந்தசுவாமி அட்டகம்

———0———

நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது

தேமா விளந்தளிர்க ளலகினல் நீவியே சித்தசன் சின்னமினிய
சின்னமூ தக்களிகோ ளளிகள்யாழ் மீட்டிடச் சித்ரப் பசுங்கிள்ளைகள்
தாமா றுருவணம் பிற்பாட் டிசைத்திடச் சரணம் பெயர்த் தணிமயில்
தகுதகென நடனமிட ராமதூ துவரின் சனங்கள்கண் டிருகரங்கள்
மாமாண் புடன்பழுவி னேற்றிடுமு டுமுடுமென மத்தளங் கொட்டுமெழிலார்
வாசமலர் வீசுபொழில் நல்லைநகர் வாழ்கின்ற வடிவேல னேயெங்குலக்
கோமா னினக்கபய மபயமேன் கோடுவினை குறைத்தென்னை யாண்டருளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 1.

வாசமலர் மருதினுறை பொற்றார்ப் பசுங்கிள்ளை வன்னத் திருப்பூவையை
வலிமிக்க பொல்லாத கலியுகத் தடியவர்கள் மனசுக் குகந்ததெய்வம்
நீசற் றுரைத்தியென வமரர்குடி வாழ்வித்த நீலமயில் வாகனனென
நிலமீதி லவனுறையு நல்லூ ரியாதென்ன நீசொன்ன தேயலைதெனத்
தேசுற்ற மாவிளந் தளிர்கோது பூங்குயில்கள் சிரமசைத் தகசரிபெனத்
தெய்வமயி லானந்த நடமாடு பூஞ்சோலை திகழுநல் லூரையனே
கூசுசுடர் வீசுவை வேலனே யபயமேன் கோடியவினை தீர்த்தாளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 2,

தூவாரு முட்புறக் கனிகீறி நறவொழுகு சுளையெடுத் தங்கோர் கடுவன்
சூலுடைய மந்திக் கருத்துபு நினைத்தினிமை சோதிக்க வாயிலிடுமுன்
ஆவாவி தென்னையோ குடிகெட்ட காரியமே மாறுமுக வடிவேலனுர்க்
கன்புட னிவேதியா துண்கின்ற தென்னையென் றம்மந்தி கூறவஞ்சித்
தேவாதி தேவனே யென்பிழை பொறுத்தினிய தீம்பழங் கொள்ளென்றுகை
சிரமீது வைத்தக் குரங்குதுதி பூம்பொழில் சிறக்குநல் லூரையனே
கோவே யுனக்கபய மபயமேன் கோடுவினை குறைத்தென்னை யாண்டருளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 3.

நானே பரப்பிரம மன்றிவே றில்லையெனு நாய்கள்வாழ் புன்மடத்துள்
நண்ணியோ ரிளம்பூவை யவர்கள்மா யாவாத நாசமொழி கேட்டுவந்து
தேனுர் செழும்பொழிற் கிள்ளையைப் பூவையைத் தீங்குயிலை வரவழைத்துத்
தீமொழி புகன்றிடச் சிவசிவா வென்றவைகள் செவிபுதைத் திதுபொய்யரன்
தானே பரம்பொரு ளெனப் பழங்கதையெனச் சட்டெனக் கழுகுபாயச்
சங்கரா சரணமென மற்றவை சிரித்திடுந் தண்பொழில்நல் லூரையவேங்
கோவே யுனக்கபய மபயமேன் கோடுவினை குறைத்தென்னை யாண்டருளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 4,

பொல்லாத பஞ்சமை யோவென்ற கிளியையொரு பூவையே னெனவுலகினர்
போசன மிலைப்பொங்க வரிசியிலை வாங்கிடப் பொருளில்லை யங்காடிபோய்
மல்லாடி வாங்கவுயிர் பொழுதோடு போகுமவ ரிப்படியோர் படிகொண்டகம்
வருமுனங் கால்குறையு முலையிலிட வரும்முடை மணிக்குடர் புரட்டிவாங்கும்
எல்லாம் பொறுத்துணிற் கால்வயிறு நோயுமா மெமதுபஞ் சானுநாமு
மேன்செய்வே மென்றழு கிறுரேனப் பூவையு மிரங்குபொழில் நல்லைமுருகா,
கொல்லா தெனைக்காத்த வேலா வடைக்கலங் கோடுவினை குறைத்தாளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 5.

என்னரிய நண்பவிப் பஞ்சகா ரணமென்னை யென்றபூ வைக்கஞ்சுகம்
யானென தெனுஞ்செருக் குங்கடவு ளுக்கச்ச மின்மையும் பாவநெறியும்
மன்னர்பொரு ளாசையுங் கைக்கூலி பேச்சமற வாங்குமதி காரிமாரின்
வன்கண்மை, யுஞ்சீவ காருணிய மின்மையும் வாலிபர் பெருந்துடுக்கும்
பொன்னையே பார்ப்பார் புரட்டுந் திருட்டுமிப் புதியநாகரி கவுணவும்
பொல்லாத பஞ்சகா ரணமெனப் பேசிடும் பூம்பொழில நல்லூரையனே
கொன்னவி லயிற்படைக் குகனே யடைக்கலங் கோடுவினை குறைத் தாளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 6.

எமனேலை கண்டெள்ளி நகையாட வல்லமெய் யெம்பிரான் றேண்டரன்பி
னினியபாற் காவடி யெடுத்துவிளை யாடிவர விதுகண்டோர் முதுவானரம்
தமரான பேர்களை யழைத்தரசி னிழலிற் றழையினுற் பந்தரிட்டுத்
தடியொன்றி லேமயிற் பீலிகட் டிப்புயந் தாங்கவா வேசமாகித்
திமிதா திமித்தியென விளையாட மற்றவைகள் செங்கரந் தொடைகொட்டியே
சேயசேய வெனக்குரவை கொண்டாடு பொழிினல்லூர்த் தெய்வமே சிவசங்கரன்
குமரா வுனக்கபய மபயமேன் கோடுவினை குறைத்தென்னை யாண்டருளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 7.

சீலமுறு தென்னையெலு மிச்சைகிச் சிலிகன்னல் திருமஞ்ச னங்கொடுப்பத்
தென்பொதிய மலைவருஞ் சந்தனங் குங்குமம் செங்கலவை திலகமுதவச்
சாலவுயா சோதியுந் தோன்றியுங் கஞ்சமும் தனிவிளக் கேந்தவரசுந்
தகரமுந் தூபமிட வழுதுதே மாபலா தண்கதலி லியவன்பிற்
வாலைதீ தருக்களர்ச் சனைசெய நிராஞ்சனம் பளிதமது பரிமாறிடப்
பைங்கொன்றை சொன்னபுட் பஞ்சாத்தி வழிபடும் பாதவந லூரையனே
கோலமர கதமஞ்ஞை வாகன வபயமென் குறைதவிர்த் தாண்டருளுவாய்
குஞ்சரி மணாளனே குறவள்ளி கேள்வனே குமாரசுவா மிக்கடவுளே. 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் (26-8-62 — 1-9-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இவ்வாரம் திரும்பவும் புதிய ஈடுபாடுகளுக்கு ஏற்றதாக இருக்கும். பண இலாபங்களும் நிலபுலங்கள் மூலமான இலாபமும் உண்டாம். ஆனால் குடும்ப அமைதி இருக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

உடல்நிலை திருப்திகரமாயிருக்காது. குடும்பத்தகராறுகளும் நண்பர்களுடனும் இனத்தவருடனும் சச்சரவுகளும் உண்டாம். செலவு கூடுதலாக இருக்கும் அதனால் நீர் கடன்படவேண்டி வரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

புது முயற்சிகளில் வெற்றி நிச்சயம், நண்பர்களும் உறவினர்களும் உதவியாக இருப்பர். உமது சாதனைகளை மிக எளிதாக முடிப்பீர். ஆனால் சிறு உடல் நிலைக் குழப்பங்கள் உண்டாம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்ப விவகாரங்கள் மேலும் குழம்பலாகவே இருக்கும். உடல் நிலையும் திருப்திகரமாயிருக்காது. செலவு கூடுதலாக இருக்கும். இனத்தவருடன் சச்சரவுகளும் உண்டாம். ஆனால் தம்பி தங்கையர் இக்கட்டிலிருந்து மீட்பர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

திரும்பவும் சாதகமான ஒரு வாரம். புதிய ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். உமது நண்பர்களிடம் உமது அதிக செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியங்களைச் சாதித்துக்கொள்ளமுடியும். எதிரிகளுக்கு இன்னலும் ஏற்படும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

செலவுகள் கூடுதலாக இருக்கும். இனத்தவருடன் தவறுன விளக்கங்களுக்கு இடமுண்டு. உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. நிலபுலங்கள் மூலமான இலாபங்கள் நிச்சயம், எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் உதவியாக இருப்பர்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வியாபார கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்ற வாரம். பண இலாபங்களும் புகழும் நிச்சயம். ஆனால் சிறு குடும்பத்தகராறுகளும் உண்டாம். தந்தையாரின் உறவினர்கள் சில தொல்லைகளை உண்டுபண்ணக்கூடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உடல்நிலை பிரச்சினையாகவே இருக்கும். முதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும். ஆனால் தொழில் விவகாரங்கள் ஓரளவு வெற்றிகரமாகும். நண்பர்கள் இடர்களிலிருந்து காப்பாற்றுவர்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பத்தகராறுகள் உண்டாம். திங்கள் செவ்வாயும் புதன்காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். உடல்நிலைக்குழப்பமும் அலுவலகத்தில் தகராறும் உண்டாம். தூரறித் திரிவோர் பற்றி எச்சரிக்கையாகஇருக்கவும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

வாரமுற்பாதி நாட்கள் புதிய முயற்சிகளுக்கு ஏற்றவை. எதிரிகளுக்கு இன்னலும் உண்டாம். மீதி நாட்களில் குடும்பத்தகராறுகளுக்கு இடமுண்டு. புதன் வியாழனும் வெள்ளிக்கிழமை மாலைவரையும் தொல்லைகரமானவை, இறுதிநாள் திரும்பவும் சாதகமானதாக மாறும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

எதிரிகளுக்கு இடையூறு உண்டாம், புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றிபெறும். செலவுகள் பெருகும் குடும்ப விவகாரங்கள் திருப்தியற்றவையாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவருடன் சச்சரவுகளுக்கிடமுண்டு. சிறு உடல் நிலைக் குழப்பங்கள் தொடர்ந்து இருந்து வரும். ஆனால் எதிர்ப்புக்களை உம்மால் தாண்டிவிடமுடியும். வெள்ளிக்குப் பிறகு குடும்பநிலை சீர்திருந்தும்.

## ஆவணி அவிட்டம்

மட்டக்களப்பு, பிராமண சமூக சேவாசங்கத்தின் ஆதரவில் சென்ற புதன்கிழமையன்று (15-8-62) கோட்டைமுனை வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் ஆவணி அவிட்டம் என்று சொல்லப்படும், மஹா சங்கல்பம், பிராயச்சித்த ஹோமம், உபவீத தாரணம் (பூணூல் தரித்தல்) ஆகியநிகழ்ச்சிகளைக்கொண்ட உபாகர்மம் நிகழ்ந்தது.

அம்பாரை, கல்லாறு கல்லடி - உப்போடை மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள பிராமணர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட இச் சங்கம் இதுபோன்ற மதவிஷயங்களிலும், ஊக்கத்துடன் செயலாற்றி, பிராமண சமூக ஒழுக்கத்தையும் சமயாசாரங்களையும்வளர்க்கப்பாடுபட்டு வருகின்றது.

## கோடடு விற்பனவு விளம்பரம்

இல. M B 3657

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில் புங்குடுதீவு கிழக்கு முருகேசு முததையாபிள்ளை — வழக்காளி.

எதிராக

புங்குடுதீவு மேற்கு கந்தையா கண்ணையா -எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 3657-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1962-ம் வருடம் ஐப்பசி மாதம் 6ந் திகதி சனிக்கிழமை (6-10-62) மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3,000 உம், இன்னும் ரூபா 1,500 க்கு 27-9-60 தொடக்கம் 28-2-61 வரையும் 100-க்குப் 18 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரையும் 100க்கு 5வீத வட்டியும் கோடடுச் செலவுரூபா 231, சதம் 92. இதில் ரூபா 100 கோட்டுச் செலவுக்காகக் கொடுபட்டது. இன்னும் ரூபா 750 கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை 'நாகியகாடு'ம் காகியகாடு மேற்தும் ப. நி. இ. 12. இதில் வடக்குப்புறமாக நி. ப 6ம், செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும், கிணறும் எல்லை கிழக்கு சண்முகநாதன் பெண் சிவக்கொழுந்துவின் ஆதனம், வடக்கு கந்தசாமி பெண் நாகரெத்தினத்திற்கும், கனகசபைபெண் இராசம்மாவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை, தெற்கு முருகேசு இலட்சுமணபிள்ளையின் ஆதனம். இதடங்கலும்,

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 17-8-62.
M. 89 24-8-62.

நல்லைக்கீர்த்தனம் — 12.

## என்முகம் பாரய்யா ஷண்முகனே!

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : அமிர்தவர்ஷனி : தாளம்: ஆதி

பல்லவி

என்முகம் பாரய்யா ஷண்முகனே — என்றும்
உன்முகம் கண்டிட உளமுருகித் தவிக்கும்

அநுபல்லவி

நின்முகம் அன்றியிந்த நிலத்தில் துணையுமுண்டோ?
இன்முகம் தந்தருள் பன்னிரு கையனே. (என்)

சரணம்

அருள்அமிர்த மழையை அகப்பயிரில் பொழியும்
ஆன்மவயல் செழிக்கும் அன்பர்வினை அழியும்
திருவளர் நல்லைநகர் திகழ்முரு கையாஉன்றன்
திருவடி சரணமே ஒருவரு மில்லைஐயா. (என்)

## பேராசிரியர் சேதுப்பிள்ளை நினைவுக்கட்டுரைப்போட்டி முடிவுகள்

[நாட்டின் பல பாகங்களிலிருந்தும், இந்தியத் தமிழகத்திலிருந்தும் ஏராளமான அன்பர்கள் இந்தப் போட்டியில் சலந்துகோண்டு தமிழ் வளர்த்த ஓர் அறிஞர்க்கு மதிப்பளித்து இந்துசாதனம் பத்திரிகையையும், இப்போட்டியை நடாத்திப் பரிசுகள் வழங்கும் சண்முககுமரேசன் அவர்களையும் பெருமைப்படுத்தியுள்ளமை குறித்து மகிழ்கிறோம்.

போட்டிக்கு ஏராளமான கட்டுரைகள் வந்து சேர்ந்தமை காரணமாகவே மாணவர் பகுதிக்கு 2 பரிசில்கள் மட்டும் வழங்கும் முடிவை மாற்றி மூன்று பரிசுகள் வழங்கும் முடிவுக்கு வந்துள்ளோம்.

வரப்பெற்ற கட்டுரைகளுள் பெரும்பாலானவை தரத்தில் உயர்ந்தவையாகவே இருந்தன

நடுவர்களாகக் கடமையாற்றிய அறிஞர்கள் துரிதமான முறையில் மிக ஆராய்வோடு கட்டுரைகளைப் பரிசீலனை செய்து ஆதரித்தமை போட்டி முடிவுகளை மிக விரைவில் வெளியிட உதவியது. அவர்களுக்கு அனைவர் சார்பிலும் எமது நன்றி.

போட்டியில் பரிசு பெறுவோர்க்கு எமது வாழ்த்துக்கள். கலந்துகொண்ட அனைவர்க்கும் எமது இதயங்கலந்த நன்றியைத் தெரிவிக்கிறோம், பரிசில்கள் பொதுவிழா ஒன்றில் வைத்து வழங்கப்படும்.]

**மாணவர் பிரிவு**

முதற்பரிசு பெறுபவர்:
வே. ஹரிதாஸ் (சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு)

இரண்டாம் பரிசு பெறுபவர்:
ஆ. குணசிங்கம் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி)
265. காவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு பெறுபவர்:
யோகேஸ்வரி வைத்திலிங்கம் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி)
12/2, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**மற்றைய பிரிவு**

முதற் பரிசு பெறுபவர்:
திரு. வ கந்தையா (ஆசிரியர்)
55, பிறவுண் ரேட், யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு பெறுபவர்:
திரு. நம. சிவ. சண்முகம், M. A. 18A தாண்டவராயன் தெரு
இராயப்பேட்டை, சென்னை 14, தென்னிந்தியா.

நடுவர்களாகப் பணியாற்றிய அறிஞர்கள்:

1, திரு. இ. கந்தையா (தலைமை ஆசிரியர்)
இராமகிருஷ்ண வித்தியாசாலை, கொக்குவில்.
2. வித்துவான்; பொன். முத்துக்குமாரன் (ஆசிரியர்)
வைத்தீஸ்வர வித்தியாலயம், வண்ணை யாழ்ப்பாணம்.
3. திருவாட்டி, ச. அமிர்தாம்பிகை (ஆசிரியை)
கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

போட்டியை நடாத்தியவர்:
திரு. ஷண்முககுமரேசன் B. A. அவர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம்,
சின்னத்தம்பி வயித்திலிங்கம் —வழக்காளி,

இல, M.B/3307.

எதிராக

உடுவில்
சீனிவாசகம் அன்ரன், அபிவாசகம் கைம்பெண் லில்லி இராசம்மா. —எதிராளி:

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B/3307-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 8-ம் திகதி (8-9-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபாய் 1620/-ம். இதில் ரூபாய் 1000/-க்கு 28-3-60திகதி தொடக்கம் 7-6-60 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம்முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 176-37 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற்கோவிற்பற்று உடுவிலிறை "வீரநாக்கன்வளவு" நிலப்பரப்பு 5-ம் குளி 15-ம். வீடும் குசினியும், செய்பயிர் வான் பயிர்களும், வடமேற்குப்பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் துரவைப்பங்கும் வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் மொசி தங்கம்மாவுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்: வடக்கு கை ஒழுங்கை முகப்பும் சின்னப்பொடி சண்முகத்தின் ஆதனமும். மேற்கு சின்னப்பொடி சண்முகத்தின் ஆதனம். தெற்கு நன்னியன் சடையனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும் வீட்டில் மேற்கரைவாசியும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer,
தெல்லிப்பழை, 21-7-1962.
M 85 24-8-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

1. ஸீ. எம். கந்தவனம் சோமசுந்தரம்
2. பெண் பராசக்தி - வழக்காளிகள்.

இல M B 3812.

எதிராக

வசாவிளான்
நாகன் வல்லி —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 3812 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1962-ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 22 ம் திகதி (22-9-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1717-50 ம், இதில் ரூபா 1500/- 2-1-61 திகதி தொடக்கம் 22-8-61 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைகக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 191-40 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக்கோவிற்பற்று வசாவிளானிறை "கறடியன் கலட்டி" நிலப்பரப்பு 56ம்) எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சுப்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு சின்னத்தம்பி கந்தவனத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு எதிராளிக்குரிய ஆதனம், தெற்கு நல்லதம்பி தம்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு H 97/62.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 2-8-1962.
M 84 24-8-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1. காரைதீவு வடக்கு கந்தையா சண்முகநாதன்
2. ஷையூர் பெண் நாகம்மா —வழக்காளிகள்.

இல, M.B/4245

எதிராக

1. காரைதிவு வடக்கு கந்தப்பு பரமலிங்கம்
2. ஷையூர் பெண் நாகம்மா —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B/4245-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1962ஆ புரட்டாதிமீ 22-ம்உ சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3303/-ம். ரூபா: 3000/-க்கு 6-9-1961 தொடக்கம் 29-1-62 வரை 6 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா: 226/15 சதம்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலையிறை "தணக்கம்பிட்டி" பர. நெ, இல. பன்னிரண்டு (பர. நெ, இல 12). எல்லை கிழக்கு எஸ். ஆர், செல்லத்துரைக்கும், கோபாலர் வயித்திலிங்கத்திற்குமுரிய வாதனங்கள். வடக்கு தப்பிலா மணி கைம்பெண் வள்ளியம்மைக்கும் முதலாம். எதிராளிக்கும், ஆறுமுகம் கந்தையாவிற்குமுரிய வாதனங்கள். மேற்கு எம் சின்னச்சிக்கும், ஆறுமுகம் கந்தையாவிற்கும், வரதராசா பெண் நல்லம்மாவிற்குமுரிய வாதனங்கள். இதடங்கலும். இதன் பதிவு C 219/33.

காரைநகர்:
1962-ம்ஆ ஆடிமீ 30-ம்உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 82 24-8-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசாதனம்

## நல்லூர்க்கந்தன் சமயப் போட்டி—2.

———0———

பங்குபற்றுபவர் பெயர் : ____________

முகவரி: ____________

எழுதும் விடைகள் தொகை: ____________

திகதி: ____________

____________
கையொப்பம்,

## சகலர்பண்பாடு — சிவஞானபோதம்

1-ம் பககத் தொடர்ச்சி

'போத மிகுந்தோர்'
'தொகுத்த பேதை
மைக்கே பொருந்தினோர்'
'கதிப்பான் செல்ல ஏது நெறி' என்னும் அவர், என்பார் அம்முத்திறத்தினர். என்றிங்ஙனம் வகுக்கின்றது சிவஞானசித்தியார்.

இம் முத்திறத்தினருள் 'போதமிகுந்தோர்' சகலரேயாயினும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் போல்வர். பிறப்பிலே ஞானம் படைத்தவர் அவர்.

'தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர்' மக்களேயாயினும விலங்கோடொப்பவர்.

இந்த இருதிறத்தாருக்கும் நூல் செய்வதில்லை.

'கதிப்பான் செல்ல ஏது நெறி' என்று விசாரிப்பவர்களுக்கே நூல் செய்வது, அவர்களே நூல் கற்றற்கு அதிகாரிகள். அவர்கள் அறிவைப்பயன் செய்பவர்கள். அதனுல், வைதிகர் எனப்படுபவர்கள் அவர்கள். வைதிகர்களுககே நூல் செய்வதென்றவாறு.

வள்ளுவராதியோர் வைதிகராகிய மனிதவர்க்கத்தாருக்கே நூல் செய்தார்கள்.

நான்மரபு இங்ஙனமாக, திராவிட மாபாடியம், திராவிடர் பண்பாடு; சிவஞானபோதம் தமிழர்க்குரியது. வேதம் பார்ப்பனச் சொத்து. உபநிடதம் ஆரியர் பண்பாடு. என்றிங்ஙனம் கொள்வது உத்தி ஆகாது. உத்தி பொருந்துமாறு. இது நிற்க.

இனி இந்து சமயபாடத்திற்கு வருவோம். அதில் 3-ம பிரிவு வேதாந்தம். அதற்கு முக்கிய நூல் உபநிடதம் பிரமசூத்திரம், கீதை என்பனவாம. அவை பேசுந்தத்துவங்கள் அத்வைத்து வைதங்களாம். அவைகளிலே இரண்டாம் பிரிவுக்குப் பங்கில்லையாம்.

"வேத மூடனுகம
புராணமிதி காசமுதல்
வேறு மூள கலைகளெல்லாம்
மிக்காக அத்துவித

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல 6675

1. உடுப்பிட்டி வயிரமுத்து இராசரத்தினம்
2, பெண் செல்லக்கண்டு மறுநாமம் சின்னத்தங்கம் -வழக்காளிகள்

எதிராக

உடுப்பிட்டி சின்னப்பு சிவகுரு கைம்பெண் செல்லாச்சி - எதிரி.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1962-ம் ஆ புரட்டாதி மாதம்


### தம்பசிட்டி மாயக்கைப்பிள்ளையார் கோவில் கூட்டு வழிபாட்டுத் தொண்டர் சபை

17-8-62 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மேற்படி கோவில் மண்டபத்தில் சைவப்புலவர் சி. அருளம்பலம் அவர்களால் கூட்டு வழிபாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. புலவரவர்கள் தமது ஆரம்ப உரையில் கூட்டு வழிபாட்டின் அவசியத்தையும், அதன் பயன்களையும் நாயன்மார்கள் சிவனடியார்கள் சரிதைகள் மூலம் எடுத்துக்கூறி, உலகை உய்விக்க வந்த உத்தமர் காந்தி மகான் தம் இறுதிவரை இடைவிடாது கைக்கொண்ட நெறி இதுவெனவும் தெரிவித்தார். சிறுவர் சிறுமியர் பெரியோர் உட்படப் பல அன்பர்கள் இதிற்பங்குபற்றி மகிழ்ந்தனர்.

———

துவித மார்க்கத்தையே
விரிவா எடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே
அத்துவித ஞானத்தை
உண்டு பணு ஞானமாகும்"
என்கின்றார் தாயுமானவர்
இனி அத்துவித துவிதம் யார் சொத்து என்பதைச் சற்றே சிந்தியுங்கள்.

மு- வைத்தியலிங்கம்,
ஆசிரியர்
அச்சுவேலி.




### அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

றிரவு அறியும்வரைக்கும வதந்திகள் தாண்டவமே நடைபெறும். எவ்வாறாயினும் ஒன்றுமட்டும் உண்மை. பீலிக்சுப் பெரியார் அரசியல் நிலைமை அசைந்துவிட்டதென்பதே.

ஆளுங்கட்சியிலிருந்து பத்து அங்கத்தவர்கள் உபமந்திரியுட்பட விலகுவதென்றால் நம்பிக்கையில்லை இந்த அரசாங்கத்தில் என்ற முடிவை அக்கட்சியினரே வெளியாக்கி விட்டனரென்பது வெளளிடைமலைபோல விளங்குகின்றதல்லவா?

சதி வழக்கில் அரசியற் சட்டத்தின் விதி நுணுக்கமாக ஆராயப்படுகின்றது. அதேவேளையிற் பாராளுமன்றத்தில் அரசாங்கம வேறொரு வகையில் வில்லங்கத்துக்குள்ளாகி விட்டது. பொதுவாகக்கூறின் இது ஒரு பெரிய அசைவு என்றே சொல்லவேண்டும்.

---

15ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று.

1. உடுப்பிட்டியிறை "மன்னுச்ச மணலுக்கு மேற்கு" நிலப்பரப்பு 4½. ஷ நிலப்பரப்பு 21 இவைகளில் 1-ம் பிரிவு முழுவதும் இரண்டாம் பிரிவில் நிலப்பரப்பு 18-ம் கூடிய நிலப்பரப்பு. 22½ இதற்கு எல்லை கிழக்கு முருகுப்பிள்ளை கந்தையாவுக்குடைய வாதனம், வடக்கு கணபதி தப்பனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு ரோட்டு, தெற்கு பொன்னுச்சாமி முத்துலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் முதுபனைகள் இளம் பனைகள் தென்னைகளடங்கலும் கிணற்றில் 9/10 பங்கும்.

2. ஷயிறை கிணற்றுப்புலம் நிலப்பரப்பு 26 ஷ தோட்டம் 1 ஷவடககு நிலப்பரப்பு 16 கூடிய நிலப்பரப்பு 43 குளி 6 இதற்கு எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் அன்னம்மாவுக்கும மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு ரோட்டு, மேற்கு எதிரிக்குடைய வாதனம், தெற்கு செல்லையா பெண் கண்மணிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இதடக்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 7½-ம் முது பனைகள் இளம் பனைகள் தென்னைகளில் இதற்குரிய பங்கும்,

துரட்சித் தொகை:- ரூபா 4300-00 இதில் ரூபா 2150-00க்கு 4-5-60தொடக்கம் 25-8-60வரையும் 12 விதவட்டி ரூபா 80-62 அதன்பின் முழுததொகை ரூபா 4380-62 க்கு 26-8-60 தொடக்கம் 26-7-62 வரையும் 5 வீத வட்டி ரூபா 420-00 ம் அங்கீகரிககப்பட்ட கோட்டுச் செலவு ரூபா 238-42 ம் கூடிய தொகை ரூபா 5039-04.

V M. KANDASAMY
Commissioner of sales
வல்வெட்டித்துறை,
13-8-62.
M 91 24-8-62.

### கூட்டுறவு விற்பனை நிலையம்

இணுவிலிலுள்ள இளைஞர் கூட்டுறவு இயககங்கள் பல ஒன்று சேர்ந்து சோத கூட்டுறவு விற்பனவுநிலையம் என்னும் வியாபார நிலையம் ஒன்றைத் திறந்து நடாத்தவும் அதில் பெறும் இலாபத்தைப் பொதுநலப் பணிகளுக்குச் செலவிடவும் தீர்மானித்துள்ளன.

———

[illegible] இறைவன் பால் வைத்திருக்கும் தன்னம்பிக்கையின் ஆழத்தைச் சோதிக்கும நிகழ்ச்சிகளாகும். —சுவாமி சிவானந்தா

## வெல்லுந்திறன்படைத்த மெய்ப்பொருள்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

"மைபொதி விளக்கே யென்ன,
மனதினுள் கறுப்பு வைதது
பொய்தவ வேடம் கொண்டு
புகுந்தனன் முத்திநாதன்"

என மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். வேடத்திறகும் அவனது உள்ளத்திறகும ஒரு தொடர்புமில்லாதது மாத்திரமல்ல வேடத்திற்குப் பொருத்மில்லாத செய்கையை அவனது மனம் கருதுகின்றது என்பதைச் சேக்கிழார் மேற்கூறிய அடிகளால் தெளியவைக்கிறார். இவ்வாறான தீமை தரும் பொய் வேடததையே "புறங் குன்றி கண்டனையரேனும் அகங் குன்றி மூக்கிற கரியாருடைத்து" என்று வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டார். பார்த்தோர் விரும்பி வணங்கத் தகுந்தது முத்திநாதன் கொண்ட வேடம் ஆனால் உள்ளமோ கொலை செய்யும் நோக்குடையது, இந்த உள்ளத்தை வேறோர் ஆசிரியர் ஓர் சிறந்த உவமைமூலம விளக்குகிறார்;

"... ... ... யார்விழிக்கும்,
பாலாகித் தோன்றிப்
பருகினால் ஆவிகொள்ளும்
ஆலால நீர்மைததே
ஐயர் இயற்கையதே"

இதில் உள்ள உவமை நயம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

இந்தப் பொய்வேடத்தோடு "மாடந்தோறும் கோதைசூழ அளகபாரக் குழைக் கொடியாட மீது சோதி வெண்கொடிகளாடும்" வீதிவழியே வருகிறான், பெண்களின் அளகபாரம் முத்திநாதன் உள்ளத்திற்கும் சோதிவெண் கொடிகள் அவனது வேடத்திற்கும் பொருந்தும்படியாக இவ்வடிகள் பாடப்பட்டுள்ளன"என்பது உரையாசிரியர்களின் கருத்து.

வாயில்காப்போர் எல்லாரும் மரியாதைசெய்ய உள்ளே புகுந்த முத்திநாதன், அரசன் சயனிக்கும் அறையினில் புகுந்தான். தேவியால் துயில் உணர்த்தப்பெற்ற அரசன் எழுந்து அடியாரை வணங்கினான். சிவபெருமானுல அருளிச் செய்யப்பட்ட ஆகமம் ஒன்றிருக்கிறது, அதனை உனக்கு உபதேசிக்கும்போது "நாமிருவருமே தனித்து இருக்க வேண்டும்" என்று கூறினான், "இங்கே நீயும நானும் வேறிடத்திருக்க வேண்டும்" என்பதற்கு "நீ அடியார் வேடத்தை மெய்யென்று வணங்கியமையால மோட்சமாகிய வீட்டிலும நான் அதற்கு வேறாகிய நரகத்திலும் இருக்கப்போகிறோம்" என்கின்ற குறிப்புத் தொனிவதாகிய ஒருஅடி என்று உரைநயமகாட்டினார் உரையாசிரியர்.

அவ்வாறே தனித்து மெய்ப்பொருள் வணங்கக் கீழே குனிய முத்திநாதன் கொண்டுவந்த ஆயுதத்தை எடுத்து அவரைக் குத்திவிட மெய்ப்பொருள் அவனைப் பகைவராகக் கருதாமல் "மெய்த்தவ வேடமே பொருளெனத் தொழுது வென்றார்."

காயப்பட்டு விழுகின்ற போதும் இயல்பாகவே அங்கலட்சண சாத்திரப்படி நீண்டதும், கொடைக்காக நீண்டதுமாகிய தனது கையால் தத்தன் என்னும காவலனால் முத்திநாதன் கொல்லப்படாமல் தடுத்து முத்திநாதனுக்கு அவனது உயிரைப் பிச்சையாகக் கொடுத்தார், "நீண்ட கையால் தரைப்படுமளவில் தத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார்."

மெய்ப்பொருளின் கட்டளைப்படியே முத்திநாதன் ஒரு தீங்குமடையாமல் வெளியே செல்ல விடப்பட்டான். சிவபெருமானைத் தியானித்துக் கொண்டே அவர் பாதங்களை அடைந்தார் மெய்ப்பொருள் நாயனார். யுத்தம் செய்த போதும முத்திநாதனை வென்றார். மெய்ப்பொருள் சிவவேடத்தோடு வஞ்சனை செய்த பொழுதும வேடமே பெரிதெனத் தமது அறவழியால வெற்றி கண்டார் மெய்ப்பொருள். எனவே "இன்னுயிர் செகுக்கக் கண்டும எம்பிரான் அன்பரென்றே நன்னெறி காதத" நாயனாரின் பாதங்களை வணங்கி நன்னெறியில் வெற்றிகாண முயலுவோம். ——

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை [illegible]கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2[illegible] இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 24-8-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org